# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

# 2023

# வளர்தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(எ - கா)

சிலப்பதிகாரம் என்ற நூலை எழுதியவர் இளங்கோவடிகள் .
( சின்னத்தம்பிப்புலவர், இளங்கோவடிகள், சோமசுந்தரப்புலவர் )

1. பண்டாரவன்னியன் ______________ எதிர்த்துப் போரிட்டான்.
( ஒல்லாந்தரை, போர்த்துக்கேயரை, ஆங்கிலேயரை )

2. இயற்கைத்துறைமுகம் ______________ அமைந்துள்ளது.
( திருகோணமலையில், மட்டக்களப்பில், வவுனியாவில் )

3. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ______________ .
( சிலந்தி, ஒட்டகம், தும்பி )

4. மயில் அகவியது. மயில்கள் ______________ .
( அகவின, அகவினர், அகவியன )

5. குமாரசுவாமிப்புலவர் பிறந்த ஊர் ______________ .
( நல்லூர், சுன்னாகம், நவாலி )

6. இனியா தேர்வுக்காக ______________ படித்தாள்.
( அக்கம்பக்கம், இரவும்பகலும், சலசல )

7. காலை + காட்சி ________________ .

( காலைகாட்சி, காலைய்காட்சி, காலைக்காட்சி )

8. நாளை எனது நண்பி இசைவிழாவில் பாட்டுப் ________________ .

( பாடுவாள், பாடுகின்றாள், பாடினாள் )

9. நாலடியாரில் ________________ அதிகாரங்கள் உள்ளன.

( 30, 133, 40 )

10. தமிழீழத்தின் தேசியப் பறவை ________________ .

( செண்பகம், காகம், புறா )

11. அம்மாவின் வளையல்கள் ________________ என மின்னின.

( படபட, பளபள, மடமட )

12. தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் ________________ .

( மார்க்கோனி, எடிசன், கலிலியோ )

13. 11 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

( பதினொன்று, பதிணொன்று, பதின்ஒன்று)

14. தகடூரை ஆண்ட மன்னன் ________________ .

( சங்கிலியன், அதியர்மான், பாரி )

15. இது எனது எழுதுகோல். ________________ உனது எழுதுகோல்கள்.

( அவற்றுள், அது, இவை )

16. பாகற்காய் உண்ணும்போது ________________ இருக்கும்.

( இனிப்பாக, கசப்பாக, புளிப்பாக )

17. விண்ணுந்து ________________ செல்லும்.

( தரையில், விண்ணில், கடலில் )

18. மாணவனுக்கு மாணவி போல தோழனுக்குத் ________________ .

( தோழி, சிறுமி, தாய் )

19. ஐயம் இன்றிக் கற்பது ________________.

( அறம், அன்பு, தெளிவு )

20. வில்லவராய முதலியார் வீடு ________________ உள்ளது?

( எப்போது, எங்கே, என்ன )

புள்ளிகள் 20

**2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

(எ - கா)

முதியவர் பாவலனை ப் பாராட்டினார். ( பாவலன் )

1. சிறுமி ____________________ த் தண்ணீர் ஊற்றினாள். ( செடி )

2. ஆசிரியர் ____________________ அழைத்தார். ( மாணவன் )


3. புலி பசித்தாலும் ____________________ த் தின்னாது. ( புல் )

4. நான் ____________________ உதவி செய்தேன். ( அம்மா )

5. தம்பி ____________________ தாயகம் சென்றான். ( அப்பா )

புள்ளிகள் 10

3) **பொருத்தமான முடிக்கும் சொல்லைக் கண்டறிந்து கட்டத்திலும் கோட்டிலும் எழுதுக.**




**எ - கா**

குயிலி வழியில் நண்பியைக் கண்டாள் .

1. சிறுவர்கள் உணவு ______________ .

2. முல்லைக்கொடி தேரில் ______________ .

3. பூனை எலியைப் ______________ .

4. மான்கள் தண்ணீர் ______________ .

5. மன்னன் ஏழைகளுக்குப் பரிசு ______________ .

புள்ளிகள்10

## 4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.

(எ - கா)

உயரமான கம்பத்தில் கொடி ____பறக்கிறது____ .

( பரக்கிறது, பறக்கிறது )

1. ________________ கூடையில் இருந்தது.

( மாம்பழம், மாம்பலம் )

2. பறவைகள் ________________ கூடு கட்டும்.

( மரத்தில், மறத்தில் )

3. நான் ________________ பாடம் படிப்பேன்.

( காலையில், காளையில் )

4. மயிலுக்கு ________________ தோகை உண்டு.

( நீன்ட, நீண்ட )

5. கோயில் ________________ ஒலிக்கின்றது.

( மனி, மணி )

புள்ளிகள் 05

## 5) சொற்களைப் பொருத்தமாக இணைக்குக.

எ - கா

| | | |
|---|---|---|
| பல்லி | வீட்டைக் | செல்லும். |
| கதிரவன் | பெற்றோரை | காலிக்கும். |
| நாய் | ஊர்ந்து | வாசிக்கின்றான். |
| சேந்தன் | தமிழ்ப் | மதிப்போம். |
| நாம் | காலையில் | காக்கும். |
| ஔவையார் | மத்தளம் | புலவர். |

புள்ளிகள் 10

6) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| அவை | ~~அது~~ | அவர்கள் |
| அவள் | நீங்கள் | அவன் |

(எ - கா)

தைப்பொங்கல் தை மாதத்தில் கொண்டாடப்படும். ___அது___ தமிழரது திருநாள்.

1. மங்கை ஓடி வந்தாள். அதனால் ______________ களைப்பாக இருந்தாள்.

2. சிறுவர்கள் பூங்காவுக்குச் சென்றனர். ______________ அங்கு விளையாடி மகிழ்ந்தனர்.

3. சேரனது பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. ______________ ஆண்டுவிழாவில் நாடகம் நடித்தான்.

4. தென்னையும் பனையும் உயரமான மரங்கள். ______________ தாயகத்தில் அதிகமாகக் காணப்படும்.

5. நான் அம்மாவுடன் பள்ளிக்கு வந்தேன். ______________ யாருடன் பள்ளிக்கு வந்தீர்கள்?

புள்ளிகள் 10

## 7) ஒரு சொல்லில் விடை எழுதுக.

(எ - கா)

தாயகத்தில் கூத்துகள் நடைபெறும் இடங்களில் ஒன்றைத் தருக.

மட்டக்களப்பு

1. புறாவைக் கொல்லக் குறி பார்த்தவன் யார்?

_______________

2. பண்டாரவன்னியனின் நடுகல் நாட்டப்பட்ட இடம் எது?

_______________

3. அதியர்மான் யாருக்கு நெல்லிக்கனியைக் கொடுத்தான்?

_______________

4. பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தவர் யார்?

_______________

5. வில்லவராய முதலியாரின் வீட்டின் முன் நின்ற மரத்தின் பெயர் என்ன?

_______________

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பூங்குழலி மூன்றாம் வகுப்புப் படிக்கின்றாள். அவளுடைய வீடு கடற்கரைக்கு அருகே உள்ளது. பூங்குழலி எல்லோரிடமும் அன்பாகப் பழகுவாள். ஒரு நாள் பூங்குழலி பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்தது. அவள் வீதியில் ஒரு நாய்க்குட்டியைக் கண்டாள். நாய்க்குட்டி மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. அவள் அதன் மீது இரக்கம் கொண்டாள். பூங்குழலி நாய்க்குட்டியை வீட்டுக்குத் தூக்கிச் சென்றாள்.

(எ - கா)

பூங்குழலியின் வீடு எங்கே உள்ளது?
<u>பூங்குழலியின் வீடு கடற்கரைக்கு அருகே உள்ளது</u> .

1. பூங்குழலி எத்தனையாம் வகுப்புப் படிக்கின்றாள்?

_______________________________ .

2. பூங்குழலி எல்லோரிடமும் எப்படிப் பழகுவாள்?

_______________________________ .

3. அவள் நாய்க்குட்டியை எங்கே கண்டாள்?

_______________________________ .

4. எது மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது?

_______________________________ .

5. பூங்குழலி நாய்க்குட்டியை எங்கே தூக்கிச் சென்றாள்?

_______________________________ .

புள்ளிகள் 10

9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை